மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனுடைய பலன்கள் எல்லாம் சரி பார்க்கப்பட்டு, கூர்ந்தாய்வில் இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், தலைவர் சார்பாகவும், என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 358, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

358—

கால்நடை மருந்தகம்

***3237—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பூரிவாக்கம் பகுதியிலுள்ள கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பூரிவாக்கம் கிராமத்திலே கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர்

2013 ஏப்ரல் 30]

அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்டு, இங்கு வருவதற்கு முன்பே, அரசின் சார்பில் ஏறக்குறைய 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையின் சார்பில் டெண்டர் கோரப்பட்டு, டெண்டர் அனுமதிக்கப்பட்டு, விரைவிலே பணிகள் துவங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலங்களிலே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொகுதிகளில் எல்லாம் பணிகள் நடைபெறாது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் கேள்வி கேட்பவர் தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என்றாலும்கூட, ஒரு தாய் அனைத்து குழந்தைகளையும் சமமாக பார்க்கிறார் என்பதற்கு உதாரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பொன்மனத் தாய் அவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொகுதிகளுக்கும் பணிகளைச் செய்திருக்கிறார் என்பதற்கு இதுவே மிகப் பெரிய உதாரணம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 359, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

359—

பட்டு ஜவுளிப் பூங்கா

***4188—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணியில் பட்டு ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்